# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.410/2025 | Date | : 27.04.2026 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : திரு.செல்வகுமார் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.04.2026.
(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.10.2025 தேதி, மாலை சுமார் 03.00 மணிக்கு சங்ககிரி காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் என்பவருடன் நானும், தலைமை காவலர் திரு.மாதேசன் ஆகியோரும் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக, சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, வைகுந்தம் ஸ்ரீ பஞ்சாபி தாபா அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு கையில் சாக்கு பையுடன் சந்தேகப்படும்படியாக நின்றுகொண்டிருந்த நபரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது, அவர் தனது பெயர் அஜய், த/பெ.சேதிலால், உன்னவ் மாவட்டம், உத்திரபிரதேசம் என்று கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி, உரிமமின்றி அரசு மதுபாட்டில்களை வாங்கிவந்து அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி பிற்பகல் சுமார் 03.15 மணிக்கு கைது

செய்தும், அவர் ஆஜர் செய்த சுமார் 180ml அளவுகொண்ட Black pearl Brandy - 05 மதுபாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் நானும், தலைமை காவலர் திரு.மாதேசன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்தை அழித்தல் மகஜர் மூலம் அழிக்கப்பட்டது. மேற்படி அழித்தல் மகசரில் நானும், தலைமை காவலர் திரு.மாதேசன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகசரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**அழித்தல் மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்னர், கைது செய்த எதிரியை மாலை சுமார் 04.00 மணிக்கு நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.433/2025, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரனை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

1) சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மாலை சுமார் 03.00 மணிக்கு சென்றிருப்போம். நாங்கள் ரோந்து சென்றபோது வழியில் எதிரியை தவிர வேறு யாரையாவது தணிக்கை செய்தோமா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து என்ன கைப்பற்றினோம் என்றால் சாக்கு பை வைத்திருந்தார். எதிரி அவர் வைத்திருந்த மதுபானத்தை யாரிடமாவது விற்றதாக விசாரித்து வாக்குமூலம் பெற்றோமா என்றால் இல்லை. எதிரி மதுபானங்களை விற்ற பணத்தை அவரிடம் இருந்து கைப்பற்றினோமா என்றால் இல்லை. மதுபாட்டில்களை சம்பவ இடத்தில் அழிக்கும்போது அதனை புகைப்படம் எடுத்தோமா என்றால் இல்லை.

2) நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும், எதிரியிடம் இருந்து மதுபானங்களை கைப்பற்றவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிமீது பொய் புகார் பெற்று அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Selvakumar

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.410/2025 | Date | : 27.04.2026 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : திரு.அருண்குமார் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.04.2026.
(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், தொளசம்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். கடந்த 05.10.2025ம் தேதி, மாலை சுமார் 03.00 மணிக்கு நானும், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வகுமார் மற்றும் தலைமை காவலர் திரு.மாதேசன் ஆகியோர்களுடன் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக, சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, வைகுந்தம் ஸ்ரீ பஞ்சாபி தாபா அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு கையில் சாக்கு பையுடன் சந்தேகப்படும்படியாக நின்றுகொண்டிருந்த நபரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது, அவர் தனது பெயர் அஜய், த/பெ.சேதிலால், உன்னவ் மாவட்டம், உத்திரபிரதேசம் என்று கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி, உரிமமின்றி அரசு மதுபாட்டில்களை வாங்கிவந்து அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி பிற்பகல் சுமார் 03.15 மணிக்கு கைது

செய்தும், அவர் ஆஜர் செய்த சுமார் 180ml அளவுகொண்ட Black pearl Brandy - 05 மதுபாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வகுமார் மற்றும் தலைமை காவலர் திரு.மாதேசன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வகுமார் மற்றும் தலைமை காவலர் திரு.மாதேசன் ஆகியோர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர், கைப்பற்றிய வழக்கு சொத்தை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32-ன் படி சம்பவ இடத்திலேயே அழித்தல் மகஜர் மூலம் அழிக்கப்பட்டது. மேற்படி அழித்தல் மகசரில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வகுமார் மற்றும் தலைமை காவலர் திரு.மாதேசன் ஆகியோர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன்.(**அழித்தல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்னர் கைது செய்த எதிரியை மாலை சுமார் 04.00 மணிக்கு நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.433/2025, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). பின்னர், எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u> -

1) சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மாலை சுமார் 03.00 மணிக்கு சென்றிருப்போம். நாங்கள் ரோந்து சென்றபோது வழியில் எதிரியை தவிர வேறு யாரையாவது தணிக்கை செய்தோமா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து என்ன கைப்பற்றினோம் என்றால் சாக்கு பை வைத்திருந்தார். எதிரி அவர் வைத்திருந்த மதுபானத்தை யாரிடமாவது விற்றதாக விசாரித்து வாக்குமூலம் பெற்றோமா என்றால் இல்லை. எதிரி மதுபானங்களை விற்ற பணத்தை அவரிடம் இருந்து கைப்பற்றினோமா என்றால் இல்லை.

2) நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும், எதிரியிடம் இருந்து மதுபானங்களை கைப்பற்றவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிமீது பொய் புகார் பதிவு செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Arunkumar